1991 செப்டம்பர் 19] [திரு. டி.எம். செல்வகணபதி]

நகராட்சி இதுவரையிலே எந்தவிதமான குடிநீர் வழங்குவதற்காக திட்டம் வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்கவில்லை. இருப்பினும் தோட்டப்பாளையத்தில் 12 கைஇறைப்பான்களும், காகிதப்பட்டறையில் 5 கை இறைப்பான்களும் பணியில் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் லாரி மூலம் நகராட்சியால் இப்பகுதிகளுக்கு குடிநீா வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவரான நான் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டு முதல் 1984–85 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த அறிக்கைகள் மீதான குழுவின் 6-வது அறிக்கை மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மின் உற்பத்தி மற்றும் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் குறித்த அறிக்கை மீதான குழுவின் 7-வது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-20

5. மானியக் கோரிக்கைகள், 1991–92.

விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.